

முதலமைச்சர் அவர்கள் விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கும் விழாவை காணொளிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, அரகண்டநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா பாடநூல், குறிப்பேடுகள், சீருடைகள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் விழாவில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றியச் செயலாளர் அ.சா.ஏ.பிரபு, நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூர்ச் செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் எஸ்.அன்பு, நகர மன்ற துணைத் தலைவர் குணா, ஒன்றியக் குழு துணைத் தலைவர் மணிவண்ணன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அக்பர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அரசின் விலையில்லா பாடபுத்தகம், பள்ளி சீருடைகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு – தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வண்டியூரில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் - திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி – மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை, ஜூன் 3 -*

மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் வண்டியூர் ரிங்ரோடு டோல்கேட் அருகே அமைந்துள்ள அவரது முழு திருவுருவ வெங்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி கொண்டாட உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கீழ் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.





அதன் விபரம் வருமாறு:-

உலகத் தமிழர்களின் உன்னத தலைவர் நாடு போற்றும் செம்மொழி நாயகர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை செம்மொழி நாளாக எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாட வேண்டுமாய் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (3.6.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9மணிக்கு உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் வகையில் வண்டியூர் ரிங்ரோடு டோல்கேட் அருகே அமைந்துள்ள அன்னாரின் திருஉருவ வெங்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்பட உள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெருந்திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில் கிளைக் கழகங்கள் தோறும் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும். பொது மக்களுக்கு அன்னதானம் வழங்குதல், ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கழகத்தினர் சிறப்பாக கொண்டாட வேண்டுமென மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, மு. மணிமாறன் தெரிவித்துள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு

# கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை! 120 மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

### திருச்சி சிவா எம்.பி. வழங்கல்! கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

*நாமக்கல், ஜூன் 3 -*

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (03.06.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 8.00 மணிக்கு, நாமக்கல் பரமத்தி சாலை, செலம்ப கவுண்டர் பூங்காவில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு கழக துணைப் பொதுச் செயலாளர்



திருச்சி சிவா எம்.பி., மாலை அணிவித்து, மரியாதை செலுத்த உள்ளார்.

பின்னர் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கில் 120 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாநகர மேயர் து.கலாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம், கே.பொன்னுசாமி, நாமக்கல் நகரச் செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், செ.பூபதி, அ.சிவக்குமார், நாமக்கல் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.பழனிவேல், மாவட்ட நிர்வாகிகள், நகர சார்பு அணி நிர்வாகிகள் வார்டு, கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளபடுகிறது.

இவ்வாறு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தலைவர் கலைஞர் 102 வது பிறந்த நாள்:

# கேரள மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாட்டம்!

### கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

*திருவனந்தபுரம், ஜூன் 3 -*

முத்தமிழ் அறிஞர் தமிழக முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் கேரள மாநிலம் முழுவதும் உள்ள மாவட்டக் கழக அமைப்புகள் சார்பில் கேக் வெட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அனைத்து மாவட்ட கழக செயலாளர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். கேரள மாநில திமுக சார்பில் மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள கேரள அரசின் தலைமைச் செயலகம் அருகில் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா கேக் வெட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சி மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் (நான்) தலைமையில் நடைபெறுகிறது.

இதில் கேரள அரசு பொது வினியோகத்துறை அமைச்சர் ஜி.ஆர்.அனில் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி கேக் வெட்டுகிறார். இந்த நிகழ்ச்சியில் திருவனந்தபுரம் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்யா ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் வி.எஸ். சிவக்குமார், மாநகராட்சி சேர் பர்சன் அம்சு வாமதேவன், திருவனந்தபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் அனீஷ், கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எல். பிரின்ஸ், துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரிகுமார், கபிலன் சந்திரமோகன் மாவட்ட கழக நிர்வாகிகள் அருண், அருள் ஜோதி,ஷாஜி, சிவன், கீதா, டாக்டர் திமூர்த்தி,மதனன் மற்றும் திருவனந்தபுரம் மாவட்ட கழக நிர்வாகிகளும் சார்பு அணியினரும் கலந்து கொள்கின்றனர்.

இதுபோல கொல்லம் மாவட்டம் புனலூர் நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெறும் நிகழ்ச்சியில்



மாவட்டச் செயலாளர் ரெஜிராஜ், ஷாஜி சுலைமான், அஜ்மல், ஹரி, ராஜேஷ், அச்சு பிலால்,ஏ. கே.நவாஸ், ஷாலினி, ராணி, கீதா கிருஷ்ணன், லால்ஜி மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் திரளாக கலந்து கொள்கின்றனர்.

அதேபோல் கேரள மாநிலம் முழுவதும் உள்ள 14 மாவட்டக் கழகச் செயலாளர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் அனைத்து நிர்வாகிகளும் சார்பு அணியினரும் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்படுவதுடன் அதன் விபரங்களை உடனடியாக மாநில தலைமைக்கு அனுப்பி தர வேண்டுகிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அண்ணா பல்கலை. மாணவி வன்கொடுமை வழக்கு:

# ஞானசேகரனுக்கு 30 வருடங்கள் தண்டனை! குறைப்பு இல்லாத ஆயுள் தண்டனை!

### சென்னை மகளிர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூன் 3 –

அண்ணா பல்கலைக் கழக மாணவி வன்கொடுமை வழக்கில் ஞானசேகரனுக்கு 30 வருடங்கள் தண்டனை குறைப்பு இல்லாத ஆயுள் தண்டனை விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிச.23ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இது தொடர்பாக மாணவி அளித்த புகாரின் பேரில் ஞானசேகரன் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றக்கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து, ஐ.பி.எஸ். அதிகாரிகள் சினேக பிரியா, பிருந்தா, ஐமான் ஜமால் ஆகியோர் கொண்ட சிறப்பு புலன் விசாரணைக்குழுவை அமைத்து ஐகோர்ட் உத்தரவிட்டது.

இந்த வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வுக் குழு அதிகாரிகள், கடந்த பிப்ரவரி மாதம் 24ந் தேதி சைதாப்பேட்டை 9வது குற்றவியல் கோர்ட்டில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். பின்னர் இந்த வழக்கு சென்னை மகளிர் கோர்ட்டுக்கு மார்ச் 7ந் தேதி மாற்றப்பட்டது. 75 சாட்சி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. 29 பேர் சாட்சியம் அளித்தனர். அனைத்து தரப்பு வாதங்களும் கடந்த 20ந் தேதி முடிவடைந்தது.

இதையடுத்து இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி கடந்த மே மாதம் 28ஆம் தேதி தீர்ப்பு வழங்கினார். மேலும் ஞானசேகரன் மீதான பாலியல் வன்கொடுமை, ஆதாரங்களை அழித்தல், பெண்ணை சட்டவிரோதமாக கட்டுப்பாட்டில் வைத்தல், நிர்வாணப்படுத் துதல் உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுகளையும் அரசு தரப்பு நிரூபித்துள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.மேலும் அவருக்கு தண்டனை வழங்குவது? குறித்து ஜூன் 2ந் தேதி அறிவிக்கப்படும் என உத்தரவிட்டார்.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று நீதிபதி ராஜலட்சுமி தலைமையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஞானசேகரனுக்கு 30 வருடங்கள் தண்டனை குறைப்பு இல்லாத ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்டார். மேலும் ஞானசேகரனுக்கு ரூ.90 ஆயிரம் அபராதம் விதித்தும், சிறையில் ஞானசேகரனுக்கு எந்த சலுகையும் வழங்கப்படக்கூடாது என்றும் மாணவி வன்கொடுமை வழக்கை சிறப்பாக நடத்திய காவல்துறைக்கு நீதிபதி பாராட்டும் தெரிவித்தார். பாலியல் குற்றவாளி ஞானசேகரனுக்கு வழங்கப்பட்ட தண்டனை விவரங்கள்:

ஞானசேகரனின் தண்டனை விவரங்கள்

*விருப்பத்துக்கு மாறாக அத்துமீறி நடத்தல்3 மாதங்கள்

*சட்டவிரோதமாக தடுத்து நிறுத்துதல் 1 மாதம்

*உடலில் காயத்தை ஏற்படுத்துதல் 1 ஆண்டு

*பாலியல் ரீதியான தாக்குதல் 3 ஆண்டுகள்

*கடுமையாக தாக்குதல் 7 ஆண்டுகள், ரூ.10,000 அபராதம்

*பாலியல் வன்கொடுமை 30 ஆண்டுகள் தண்டனை குறைப்பு இல்லாமல் ஆயுள், ரூ.25,000 அபராதம்

*கொலை மிரட்டல் விடுத்தல் 7 ஆண்டுகள், ரூ.25,000 அபராதம்

*பாலியல் வன்கொடுமை தொடர்பான ஆதாரங்களை அழித்தல் 3 ஆண்டுகள், ரூ.10,000 அபராதம்

*தனிநபர் அந்தரங்க உரிமைகளை மீறுதல் 3 ஆண்டுகள், ரூ.10,000 அபராதம்.

*மொத்தம் ரூ.90,000 அபராதம்

*சிறை தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என ஞானசேகரன் மீதான 11 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

# தி.மு.க. பொறியாளர் அணி - வர்த்தகர் அணி - நெசவாளர் அணி - அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி – வர்த்தகர் அணி – நெசவாளர் அணி – அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (04-06-2025 - புதன் கிழமை), மாலை 4.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பொறியாளர் அணி – வர்த்தகர் அணி – நெசவாளர் அணி – அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
நாள் : 02-06-2025.

**திருச்சி சிவா, எம்.பி.,**
துணைப் பொதுச்செயலாளர்,
தி.மு.க.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி ஊசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ. மாணவிகளுக்கு இலவச சீருடைகளை மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழுத் தலைவர் அமுதா ஞானசேகரன், துணைத் தலைவர் மகேஸ்வரி காசி, மாவட்டக் கவுன்சிலர் தா.பாபு, ஊராட்சி மன்றத் தலைவர் தேவி சுரேஷ், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம். பள்ளிகல்வித்துறை சார்பில் காட்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புதிய பாடநூல்கள் மற்றும் பள்ளி சீருடைகளை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணித் தலைவர், டி.எம்.கதிர் ஆனந்த் வழங்கினார். உடன் வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டலக்குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர்கள் அன்பு, லோகநாதன், சித்ரா, கழக நிர்வாகிகள், அரசு ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.